# தமிழ்நாட்டில் வறுமையை ஒழிக்கும் இறுதிப் போரைத் தொடங்கியுள்ளோம்!

## நிதிநிலை அறிக்கை!... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

51. மகளிர் கல்வியைப் போற்றிப் பாதுகாத்திட அறிமுகப்படுத்தப்பட்ட **'புதுமைப் பெண்'** திட்டத்தைப் போன்று, ஆடவரும் உயர்கல்வி பெற்றிட முன்னெடுக்கப்பட்டதே **'தமிழ்ப் புதல்வன்'** திட்டம். ஆடவருக்கு உயர்கல்விக்காக மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கும் இத்திட்டத்தில், இதுவரை 5,40,511மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

52. மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பு நிதி நல்கை 767 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் செயல்படும் மாநிலப் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளில் உரிய முன்னேற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில் 175 கோடி ரூபாய் கொண்ட செயல்திறன் ஊக்க நிதியமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர் கல்வித் துறைக்கு 8,505 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டச் செயலாக்கம்**

53. சிறார்கள், ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள். மாற்றுப்பாலினத்தார் என அனைத்துப் பிரிவினரும் நலம் காண விழைந்திடும் முனைப்பில் முத்திரைத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதில் முன்னோடி அரசாக இவ்வரசு திகழ்கிறது.

54. பள்ளிக் கல்வி முடித்த மாணவர்கள், அவர்தம் விருப்பத்துக்கேற்ற கல்லூரிக் கல்வியைத் தேர்ந்தெடுப்பதில் வழிகாட்ட **'கல்லூரிக் கனவு'** எனும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில், 2 இலட்சத்து 68,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

55. தாய்த் தமிழ்நாட்டில் கல்வி கற்று, தரணியை ஆளும் தகுதியைத் தமிழ் மாணவர் பெற்றிட, முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமாம். **'நான் முதல்வன்'** திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை கல்லூரி மாணவர்களுக்கு 48,65,050 திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் இங்கிலாந்து, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளின் சர்வதேச பயிற்சிகளில் பங்குபெற்றுள்ளனர். மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் திறன் பயிற்சி பெற்று வேலைவாய்ப்புகளுக்கு இளைஞர்களைத் தயார்படுத்திடும் **'வெற்றி நிச்சயம் திட்டம்'** மூலம் 16 ஆயிரத்து 815 இளைஞர்கள் பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர்: 70 ஆயிரத்து 500 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

56. ஒன்றிய குடிமைப்பணித் தேர்வில், தமிழ்நாட்டு இளைஞர்கள் பெருமளவில் வெல்வதற்காக, உதவித் தொகை, ஊக்கத் தொகை ஆகியவை வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறார்கள். 2025 ஆம் ஆண்டு குடிமைப்பணித் தேர்வில் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 59 நபர்களில் 52 நபர்கள், நான் முதல்வன் திட்டப் பயனாளிகள் என்பது அரசின் செயற்பாட்டுக்குக் கிடைத்த நற்சான்று.

57. மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளில், பத்து முன்னுரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட **'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'** திட்டத்தின் கீழ் 15,467 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.410 பணிகள் எடுக்கப்பட்டு, 1,394 பணிகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, 808 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏனைய 586 பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு 17,088 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

58. இளைஞர்களின் ஆற்றலை விளையாட்டுத் துறையில் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதன் மூலம், வெற்றியாளர்கள் பலரை உருவாக்கி, நமது மாநிலத்தை உலகறியச் செய்யும் உயரிய நோக்கத்தோடு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேவையான விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**59. 'டாக்டர் கலைஞர் விளையாட்டுத் தொகுப்புகள் வழங்கும் திட்டத்தின்'** கீழ். 86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 12,525 கிராம ஊராட்சிகளுக்கு 16,798 விளையாட்டுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 4,226 விளையாட்டு வீரர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்துகொள்ளத் தேவையான விளையாட்டுக் கருவிகளைத் தமிழ்நாடு வாகையர் அறக்கட்டளை வழங்கியுள்ளது.

60. தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த 5,403 விளையாட்டு வீரர் , வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 176 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் **முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்** முன்னெடுக்கப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு 101 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. மாநில அளவில், 'முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா இது நம்ம ஆட்டம் 2026' போட்டிகளை நடத்திட 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

61. நாடே வியக்கும் வண்ணம் கடந்த 2022ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் முதல் இளையோருக்கான உலகக் கோப்பை ஹாக்கி போட்டிகள் வரை பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் சிறப்புற நடத்தப்பட்டதைப் பாராட்டும் விதமாக, இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பின் விளையாட்டு விருதை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கடந்த 2023 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் வென்றெடுத்துள்ளது. விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் எனும் விருது உள்ளிட்ட மேலும் பல விருதுகளையும் தமிழ்நாடு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 718 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

62.

**"ஒரு இலட்சிய கிராமத்தை உருவாக்குவது என்பது**
**எந்த வகையிலும் ஒரு இலட்சிய இந்தியாவை உருவாக்குவதை விட சளைத்ததில்லை"**
**- மகாத்மா காந்தியடிகள்**

**2030 ஆம் ஆண்டிற்குள் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகளை** அமைத்து, குடிசைகளே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் நோக்கத்தோடு தொடங்கப்பட்ட **'கலைஞர் கனவு இல்லம்'** திட்டம், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 1,71,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டும். மேலும் 29,000 வீடுகளின் கட்டுமானப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இந்த திட்டம், மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதால், **கூடுதலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும்** என்று அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். மேலும், 2001 ஆம் ஆண்டு வரை அரசால் கட்டி முடிக்கப்பட்ட 1,14,488 வீடுகள் 969 கோடி ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

63. தமிழ்நாட்டின் குக்கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியினை மேம்படுத்தி, வேளாண்மையையும் பொருளாதார நடவடிக்கைகளையும் ஊக்குவித்திட தரமான கிராமச் சாலைகளை அமைக்கும் நோக்கோடு செயல்படுத்தப்பட்டு வரும் **'முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு'**. இதுவரை 8,911 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20,484 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. **'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' II**ன் கீழ், கிராம ஊராட்சிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட இதுவரை 6,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 82,498 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 28,687 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்**

64. நாட்டிலேயே மிக விரைவாக நகரமயமாகி வரும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானது. இதன் காரணமாக, வளர்ந்து வரும் நகர்ப்புர உட்கட்டமைப்பு. குடிநீர் வழங்கல். திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து வசதி. சுற்றுச்சூழல் பேணுதல் ஆகிய தேவைகளை நிறைவு செய்திடும் நோக்கோடு பல்வேறு திட்டங்களை நமது அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. **'கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்'** கீழ். கடந்த ஐந்து ஆண்டுகளில் 5,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு. 10,226 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், சாலை மேம்பாடு, சமுதாயக் கூடங்கள், நூலகங்கள், பூங்காக்கள், சந்தைகள், எரிவாயு தகன மேடைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 'சிங்காரச் சென்னை 2.0' திட்டத்தின் கீழ், இதுவரை 1227 பணிகள் 2491 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அவற்றில் 1123 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

65. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கத்தோடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 87 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 15,591 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, ஒரு கோடியே 65 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியின், அனைத்து நீர்ப் பகிர்மான நிலையங்களையும் இணைத்து, சென்னை மாநகரில் அமைந்துள்ள அனைத்து குடிநீர் விநியோக நிலையங்கள் மூலம் சமச்சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்திடும் வகையில், **'முதன்மை சுற்றுக்குழாய்த் திட்டம்'** 3,109 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், 150 எம்.எல்.டி. திறன் கொண்ட நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டமானது, முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு, சென்னை மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் கிடைக்கப் பெறும் நிலையில், 400 எம்.எல்.டி. திறன் கொண்ட பேரூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டப் பணிகளும் விரைந்து நடைபெற்று வருகிறது.

66. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள நாற்பது ஆண்டுகளுக்கு மேலான கூட்டுக்குடிநீர்த் திட்டங்களை புதுப்பித்து அவற்றின் செயல்திறனை மேம்படுத்திடவும், தேவையான இடங்களில் உரிய நீர் ஆதாரங்களை புதுப்பித்திடவும், 116 கூட்டுக்குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக 809 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

67. திருச்சி, மதுரை, ஈரோடு. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளில் காவிரி, வைகை, நொய்யல், தாமிரபரணி போன்ற ஆறுகளில், கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், விற்பனைப் பகுதிகள், தெரு விளக்குகள், அழகிய பூங்காக்கள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய நதிக்கரை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 374 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

68. போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் பல்வேறு மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் 199 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 101 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களும். தொழில் முனைவோரும் பயன்படுத்தும் வகையில் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 **முதல்வர் படைப்பகங்கள்** தமிழ்நாடெங்கும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 28,227 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வடசென்னை வளர்ச்சித் திட்டம்**

69. சென்னை மாநகரின் அனைத்துப் பகுதிகளும் சமச்சீரான வளர்ச்சியை பெறுவதை உறுதி செய்யும் நோக்கத்தில், இந்த அரசு தொடங்கிய இலட்சியத் திட்டமான **'வடசென்னை வளர்ச்சித் திட்டம்'**, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பேருந்து நிலையங்கள் அமைத்தல், குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல், குடிநீர் வழங்கல், கல்வி மற்றும் மருத்துவ உட்கட்டமைப்புப் பணிகள், ஏரிகள் மற்றும் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள், கடற்கரைகளை மேம்படுத்துதல், மீன் சந்தைகள் அமைத்தல், உடற்பயிற்சி நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுக் கட்டமைப்புப் பணிகள், மின் மயானங்கள் அமைத்தல், துணை மின் நிலையம் மற்றும் மின் மாற்றிகள் தரம் உயர்த்துதல், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் போன்ற பல்வேறு பணிகள் 6,045 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடே போற்றும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிய முதல்வர்!



**இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாக திகழ்வது மட்டுமின்றி. நாட்டிலேயே இரட்டை இலக்க உயர் பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடையும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடே போற்றும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நல்வழி காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.**

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு**

70. சமூக மேம்பாட்டையும், தொழில் வளர்ச்சியையும். இரு கண்களாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர்தம் நலன் பேணும் நல்லரசாகச் செயல்படுகிறது. தொழிற்துறைக்குத் தேவையான திறன் மிகு பணியாளர்களை உருவாக்குவதற்காக, இதுவரை 41 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைத்திட 298 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், தரமான வேலைவாய்ப்புகளைப் பெற்றிடத் தேவையான திறன்களை இளைஞர்களுக்கு வழங்கிட, 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் 2877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் 4.0 (Industry 4.0) தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

71. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு நல உதவிகளை வழங்குவதில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், 38,62,919 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு 3,397 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 40 வயதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்து, மருத்துவப் பரிசோதனை அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பட்டாசுத் தொழிற்சாலை விபத்துகளில் உயிரிழந்த தொழிலாளர்தம் குழந்தைகளுக்கு 18 வயது நிறைவடையும் வரை மாதாந்திர பராமரிப்புத் தொகை, கல்வி உதவித்தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன.

72. தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில், 2,000 தொழிலாளர்களுக்கு புதிய இருசக்கர மின் வாகனங்கள் வாங்குவதற்கு 20,000 ரூபாயை மானியமாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 1996 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு**

73.

**"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்" (குறள் - 949)**

எனும் குறளின் இலக்கணத்திற்கேற்ப, தமிழ்நாடு அரசு, மக்களின் உடல் நலத்தைப் பேணுவதில் தனிக்கவனத்துடன் செயல்படுகிறது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கோவிட் பெருந்தொற்றை எதிர்கொண்டு பேராற்றலுடன் சமாளித்தது. இதனைத் தொடர்ந்து, நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகளில் மட்டுமன்றி, நோய்களை முன்கூட்டியே அறிந்து தடுக்கும் வழிமுறைகளிலும் உரிய கவனம் செலுத்தி வருகிறது.

74. இந்த அரசால் செயல்படுத்தப்படும் **'மக்களைத் தேடி மருத்துவம்'**, திட்டத்தில், தொற்றா நோய்களைக் கண்டறிய, வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 2.55 கோடி பயனாளிகள் முதன்முறை சேவைகளையும். 4.75 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் தொடர்சேவைகளையும் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். **'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48'** திட்டம். இதுவரை 5,11,916 உயிர்களைக் காத்துள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை 493 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட 1206, **'நலம் காக்கும் ஸ்டாலின்'** மருத்துவ முகாம்களின் மூலம் 17,82,687 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்** கீழ், இதுவரை 6,374 கோடி ரூபாய் மதிப்பிலான காப்பீட்டுத் தொகை அனுமதிக்கப்பட்டு, 87,34,363 காப்பீட்டுக் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டுள்ளன. **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்** கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 34,40,550 மகளிருக்கு 4,042 கோடி ரூபாய் மதிப்பிலான நிதியுதவி விடுவிக்கப்பட்டுள்ளன.

75. புற்றுநோய் மேலாண்மை இயக்கத்தின் கீழ், புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் புற்றுநோய் கண்டறியும் முகாம்கள். இதுவரை 23 மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கலந்துகொண்ட 79.17 இலட்சம் நபர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், 1929 நபர்களுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது உரிய சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆரம்ப கட்டத்திலேயே இவ்வாறு புற்றுநோயைக் கண்டறிவதன் மூலம் அவர்களை குணப்படுத்த முடியும். மேலும், **கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசியை** அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 14 வயதிற்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கிவைத்துள்ளார். மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள **'அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையை'** 398 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஒப்புயர்வு மையமாக மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

76. **2024 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் இடைநிலை செயலணி விருதுகளில்**, சுகாதாரத் துறை அமைச்சகங்கள் பிரிவில், **'மக்களைத் தேடி மருத்துவம்'** திட்டத்தில் திறம்படச் செயலாற்றியதற்காக தமிழ்நாடு அரசு விருது பெற்றுள்ளது பெருமைக்குரியது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 22,090 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி**

77. 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி எனும் இலக்குடன் இயங்கும் தமிழ்நாடு அரசு, **உலக முதலீட்டாளர் மாநாடு**. TN-Rising போன்ற முன்னெடுப்புகள் மூலம் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் முதலீடுகளை மிகப்பெரும் அளவில் ஈர்த்து வருகிறது.

78. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் இதுவரை, 36 இலட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகும் வகையில், 12.37 இலட்சம் கோடி ரூபாய் உறுதி அளிக்கப்பட்ட முதலீடுகளுக்கான 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

79. மாநிலம் முழுவதும் தொழில் வளர்ச்சி சமச்சீராகப் பரவும் வகையில் மாவட்டந்தோறும் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 2021 ஆம் ஆண்டு வரை 15 மாவட்டங்களில் 32525 ஏக்கர் பரப்பளவில் 24 சிப்காட் தொழிற்பூங்காக்கள் செயல்பட்டு வந்த நிலையில், இவ்வரசு பொறுப்பேற்ற பின், மேலும் 12 புதிய மாவட்டங்களில் புதிய தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டு தற்போது 49,468 ஏக்கர் பரப்பளவில் 54 தொழிற்பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக 28,392 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

80. **'தமிழ்நாடு அறிவுசார் நகரம்'** மற்றும் சென்னைக்கு அருகில் 2,000 ஏக்கர் பரப்பளவில் **'உலகளாவிய நகரம்'** ஆகிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருப்பெரும்புதூரில் 706 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18,720 படுக்கை வசதிகள் கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய பணியாளர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

81. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இத்தகைய முன்னோடி நடவடிக்கைகளின் காரணமாக, தொழில் வளம் பெருகி, 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 11.19 சதவீதம் எனும் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை எட்டி, நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. மேலும், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 41.23 சதவீதம் பங்களிப்புடன் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது.

**தொடர்ச்சி 6-ஆம் பக்கம்**

# கலைஞர் கனவு இல்லம் - கூடுதலாக 1 லட்சம் வீடுகள் கட்டப்படும்!